## வரலாறு - பகுதி 11

### 11] ஹர்ஷப் பேரரசு

### பாடக்குறிப்புகள்

1] குப்தர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு, அந்நியர் (ஹூணர்) படையெடுப்புகளால் சீர்குலைந்திருந்த வட இந்தியாவில் மீண்டும் ஒரு பேரரசை உருவாக்கியவர் தானேஸ்வரத்தின் அரசர் ஹர்ஷவர்த்தனர் ஆவார்.

2] தானேசுவரம் பகுதியை வர்த்தமான மரபினர் ஆண்டனர்.

3] வர்த்தமான மரபினை தோற்றுவித்தவர் பிரபாகவர்த்தனர்.

4] பிரபாகவர்த்தனரின் மறைவுக்குப்பின் ராஜ்ஜிய வர்த்தனர் ஆட்சிக்கு வந்தார்.

#### ஹர்ஷர் (கி.பி.606 - கி.பி.647)

1] ஹர்ஷர், தமது அண்ணனைக் கொன்ற சசாங்கனுடன் நீண்டகாலம் போர்புரிந்தார். இதில் இவருக்குக் காமரூப (அஸ்ஸாம்) மன்னன் பாஸ்கரவர்மன் உதவிசெய்தார்.

2] சசாங்கன் இறந்தபிறகு, வங்க அரசின் பெரும்பகுதியைத் தன்னரசுடன் இணைத்துக் கொண்டார்.

3] தனது தங்கை ராஜஸ்ரீயின் வேண்டுகோளுக்கு இணங்க, கன்னோசிக்கும் மன்னர் ஆனார். இதற்குப் பின்னர், தலைநகரத்தை தானேசுவரத்திலிருந்து கன்னோசிக்கு மாற்றினார்.

4] மாளவம், சிந்து, ஒரிசா பகுதிகளையும் ஹர்ஷர் வென்றார்.

5] தென்னிந்தியாவைக் கைப்பற்றவும் இவர் முயன்றார். ஆனால், அதில் இவர் வெற்றி பெறவில்லை. ஏனென்றால், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி இவரைத் தோற்கடித்தார்.

6] ஹர்ஷர் ஆரம்பத்தில் இந்து சமயத்தை தழுவினார். பௌத்தத் துறவியாக மாறிய ராஜஸ்ரீ, சீன அறிஞர் யுவான் சுவாங் ஆகியவர்களால் ஹர்ஷர் பௌத்தத்தின்பால் ஈர்க்கப்பட்டார்.

7] யுவான்சுவாங் கி.பி. 644 ஆம் ஆண்டு இந்தியா வந்ததை கௌரவிக்கும் வகையில் கன்னோசியிலும், பிரயாகையிலும் இவர் மிகப்பெரிய அளவில் சமய மாநாடுகள் நடத்தினார். இவற்றில் பௌத்த அறிஞர்களுடன் பிறமத அறிஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

8] தனது செல்வங்கள் அனைத்தையும், இம் மாநாடுகளின் இறுதியில், துறவிகளுக்கும், அறிஞர்களுக்கும், பொதுமக்களுக்கும், வாரி வழங்கினார் ஹர்ஷர்.

9] விவசாயிகள் தங்கள் விளைச்சலில் 6 - இல் ஒரு பங்கினை அரசுக்கு வரியாக செலுத்தினர்.

10] மரண தண்டனை போன்ற கடுமையான தண்டனைகள் கிடையாது.

11] ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பிரயாகைக் கூட்டத்தில் தனது செல்வங்களை கொடையாக கொடுத்தார்.

12] ஹர்ஷர் ஆதரித்த அறிஞர்கள் ஹரிதத்தர், ஜெயசேனர்.

13] பௌத்தப் பல்கலைக்கழகமான நாளந்தா ஹர்ஷரது ஆதரவால் உலகப் பகழ்பெற்ற பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்று சிறந்த கல்விக்கூடமாக திகழ்ந்தது.

14] இவரது காலத்தில் தர்மபாலர் என்பவர் கப்பல் கலைக் கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றினார்.

15] இந்தியாவின் பலபகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் நாளந்தா பல்கலைக்கழகத்தில் கல்வி பெறுவதற்காக இந்தியாவிற்கு வந்தனர்.

16] ஹர்ஷர் இடைவிடாது பயணம் செய்து மக்களின் குறைகளையும் தேவைகளையும் கேட்டறிந்து நல்லாட்சி புரிந்தார். கலை, இலக்கியம் போன்றவற்றிற்கு ஆதரவளித்தார்.

17] இவரது அமைச்சரான பாணர் சமஸ்கிருத மொழி அறிஞராவார். இவர், ஹர்ஷசரிதம், காதம்பரி என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

18] ஹர்ஷர் வடமொழியில் புலமை பெற்றவர். இவர் நாகானந்தம், ரத்னாவளி, பிரியதர்சிகா என்னும் நாடகங்கள் / நூல்களையும் படைத்துள்ளார்.

19] சீன நாட்டைச் சேர்ந்த பௌத்தத் துறவி யுவான் சுவாங், இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். கன்னோசி, பிரயாகை, நாளந்தா, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல இடங்களுக்கும் சென்றார். ஹர்ஷரது அரசவையிலும் சிறிதுகாலம் இருந்தார். "இவர் எழுதிய, சி-யு-கி, என்னும் பயண நூல் அன்றைய இந்தியாவைப் பற்றியும், பௌத்த சமயத்தைப் பற்றியும் பலசெய்திகளைத் தருகின்றது.

20] யுவான் சுவாங் சாளுக்கியர், பல்லவ மன்னர்களின் அரச சபைகளுக்கும் சென்றார். எனவே, யுவான் சுவாங் புனித பயணிகளின் இளவரசர் என்று அழைக்கப்பட்டார்.

21] இசுலாமியர் படையெடுப்பிற்கு முன், வட இந்தியாவில் இருந்த கடைசிப் பேரரசு ஹர்ஷரது பேரரசாகும்.